58
டிச. '85

மாதஇதழ்
60 காசு

# சுட்டி

## கடந்த மாதம் சென்னையில் சில நாட்கள்...




கடந்த 6 நாட்களாக அவசர போலீஸ் உதவி கோர நம்பர் 100 க்கு டெலிபோன் செய்ய முடியாது. தலைமை தீயணைப்பு நிலையத்தின் டெலிபோன்களும் இயங்கவில்லை.
தினசரி 18 11 85.

FREE E- BOOKS , www.thamizham.net.,

# கதிரவன்

மாத இதழ்,
கதிரவன் அச்சகம்,
15, சரோஜினி வீதி,
மகாலிங்கபுரம்,
பொள்ளாச்சி 642 002.

FREE E- BOOKS , www.thamizham.net.,

# இந்தியா-பாக் போர் நேர்ந்தால்...


## இராணுவ ஒப்பீடு

| | INDIA | PAKISTAN |
|---|---|---|
| காலாட் படை | 11.3 (LAKH) | 4.85 (LAKH) |
| டாங்குகள் | 2,400 | 1,600 |
| பல்நோக்கு டாங்குகள் | 2,500 | 1,400 |
| ஆயுத ஆள் ஏந்தி டாங்குகள் | 600 | 550 |
| போர் விமானங்கள் | 740 | 275 |
| நீர் மூழ்கி கலங்கள் | 8 | 11 |
| விமானம் தாங்கிக் கப்பல்கள் | 1 | - |
| நாசகாரிகள் | 3 | 7 |
| பிரிகேட்டுகள் | 21 | 16 |
| கப்பற்படை விமானங்கள் | 36 | 3 |

FREE E- BOOKS , www.thamizham.net.,

# அரசும் ஆசிரியரும்

வரலாறு காணா அளவுக்கு ஆசிரியர்கள் போராட்டம் உருவெடுத்ததற்குக் காரணம், அவர்களின் போராட்ட நியாயங்களும், அரசின் படுமோசமான போக்குமேயாகும்.



நாளை வரப்போகும் முழுப் புரட்சிக்கு இன்றே ஒத்திகை அணிவகுப்பு நடத்துவது போல லட்சக்கணக்கான ஆசிரியர்கள் தினம், தினம் தமிழகத்து வீதிகளில் ஊர்வலமும் ஆர்ப்பாட்டமும் நடத்தி வருகின்றனர். தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் – முதல், பட்ட மேற்படிப்பு கல்லூரி ஆசிரியர் வரையும், ஆசிரியர் அல்லாத அலுவலர் உட்பட ஒன்றிணைந்து 42 சங்கங்களுக்கு

## ஆசிரியர் போராட்டத்தின் நியாயங்கள்

மேல் – மொத்த கல்வியுலகமே போராட்டத்தில் குதித்திருப்பது இதுவே முதல் முறை.

இந்தப் போராட்டம் வேறு எதைச் சாதிக்காவிட்டாலும் தமிழகம் தழுவிய ஆசிரியர்,

FREE E- BOOKS , www.thamizham.net.,

அலுவலரின் (JACTTEA) கூட்டமைப்பை நிறுவி, இலட்சக் கணக்கானவர்களை ஒற்றுமையாக நிறுத்த வழி செய்து விட்டது. இக் கூட்டணி நாளை இன்னும் நிறைய சாதிக்கும்.

ஆசிரியர்கள் போராட்டத்திற்குக் காரணமான 10 அம்ச கோரிக்கைகளின் முக்கியமானது 4-வது ஊதியக் குழு செய்த ஓரவஞ்சனையை மாற்றி, நியாயம் வழங்கச் செய்வதாகும். கீழ்கண்ட பட்டியல் அவர்களின் போராட்ட நியாயத்தைப் புலப்படுத்தும்.

இது தவிர, 12 ஆண்டு காலமாக ஆசிரியர்களுக்கு ஊதிய விகிதங்கள் மாற்றியமைக்கப்படவில்லை.

**நான்காவது ஊதியக்குழு**
**ஆசிரியர்களுக்கு இழைத்த அநீதி**

| | ஆசிரியர்களுக்கு வழங்கியது | | | மற்றவர்களுக்கு வழங்கியது | |
|---|---|---|---|---|---|
| | பழைய ஊதியம் | புதிய ஊதியம் | | பழைய ஊதியம் | புதிய ஊதியம் |
| இடைநிலை ஆசிரியர் | 350 | 610 | — | 350 | 705 |
| தேர்வு நிலை இடைநிலை ஆசிரியர் | 400 | 705 | — | 400 | 780 |
| BT ஆசிரியர், தமிழாசிரியர் | 450 | 780 | — | ‹450 | 950 |
| தேர்வு நிலை BT ஆசிரியர், தமிழாசிரியர் | 600 | 1045 | — | 600 | 1340 |
| முதுநிலைப் பட்டதாரி ஆசிரியர் | 675 | 1150 | — | 675 | 1340 |
| மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் | 750 | 1340 | — | 750 | 1675 |

ஆசிரியர்கள் இன்னும் பல கோரிக்கைகள் சட்ட மன்றத்தின் இரு அவைகளில், அமைச்சர்கள் அளித்த வாக்குறுதிகளே! புதிய சலுகைகள் அல்ல! அளித்த வாக்குறுதியை நிறைவேற்றத் தவறிய அரசிடம் போராடியே தீர வேண்டியிருக்கிறது.

FREE E- BOOKS , www.thamizham.net.,

ஏதோ அரசியல் கட்சிகள் தூண்டிவிட்டு போராட்டம் நடத்துவதாக முதலமைச்சர் கதைப்பது அர்த்தமற்ற பொய். அரசு,தனக்கு ஜால்ரா போடும் பொம்மை சங்கங்களை நிறுவி, இப்போராட்டத்தை நசுக்க முயன்றது தான் மெய். ஆனால், இந்த பொம்மை சங்கங்கள் கூட, முழுமையாக போராட்டத்தில் கை கோர்த்து இறங்கிவிட்டன. காரணம், அதிலுள்ள ஆசிரியர்கள் விழித்துக் கொண்டார்கள். ஆளும் அரசு மேல், அரசியல் வாதிகள் மேலும் நம்பிக்கை வைப்பதைவிட ஆசிரியர்களின் ஒற்றுமை மீது நம்பிக்கை வைப்பதே வலுவானது என்று உணரத் தொடங்கி விட்டனர்.

50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஆசிரியர்களை வெஞ்சிறையில் தள்ளி விட்டு, அரசு மாற்று ஆசிரியர்களை நியமிக்க முன்வருமா? தங்கள் ஆசிரியர்கள் சிறையிலடை பட்ட பின்னர் மாணவர்கள் சும்மா இருப்பார்களா? எனவே, இந்த அரசு மாற்று மாணவர்களையும் கூலி கொடுத்துக் கொண்டு வந்து போலியாக கல்விக் கூடங்களை நடத்திக் காட்டட்டும். ஆனால், பொது மக்கள் இதனால் ஏமாறமாட்டார்கள்.

— ஸ்டெனிஸ்லாஸ்

## சுட்டி சந்தா

சுட்டி சந்தா: 12 இதழ்கள் அஞ்சலில் பெற ரூ 7.00 பணவிடை செய்யுங்கள்.

## சுட்டி முகவரி

எல்லாத் தொடர்புகளுக்கும்: சுட்டி 1494, அண்ணாநகர், சென்னை 600 040

## முன் இதழ்கள்

சுட்டி முன் இதழ்கள் எண்: 1 முதல் 19 21. 27, 30 தவிர பிற இதழ்கள் யாவும் கிடைக்கும். 50 வது இதழ் 0.75 காசு மற்ற இதழுக்கு 45 காசு விதம் அஞ்சல் தலை/பணவிடை அனுப்பினால் அஞ்சலில் உங்களுக்கு வந்து சேரும்.

## சுட்டி இலவசம்

சுட்டி இலவசம்: சுட்டியைக் கேள்விப்படாத, விரும்பி ஏற்கக் கூடிய நண்பர்களின் முகவரிகளை அனுப்புங்கள். அவர்களுக்கு உங்கள் சார்பில் ஒரு மாதிரி இதழ் இலவசமாக அனுப்புகிறோம். எவ்வளவு முகவரிகள் வேண்டுமானாலும் அஞ்சலட்டையில் எழுதி அனுப்பலாம்.

## சுட்டி வரவில்லை

சுட்டி ஒழுங்காக வந்து சேருவதில்லை என்று சில சந்தாதாரர்கள் மௌனமாகக் குறைபட்டுப் பயனில்லை. என்ன முயற்சி எடுத்தும் சில சுட்டி இதழ்கள் அஞ்சலில் திருடப்படுவது தவிர்க்க முடியாதிருக்கிறது. சந்தா முடிய காலமிருந்தும் 15 ஆம் தேதிக்குள் சுட்டி கிடைக்கப் பெறா சந்தாதாரர்கள் சந்தா எண் குறிப்பிட்டு (மறந்தால், பெயர் முகவரி) எழுதினால் மீண்டும் ஒரு முறை அனுப்புகிறோம். வேறு வழியில்லை.


வேல் டைப் பௌண்டரி

- புதிய வகை உ வண்ண அச்செழுத்துக்கள்
- எல்லா மொழி அச்செழுத்துக்கள்
- போஸ்டர் எழுத்துக்கள்
- எல்லா வித அச்சக உபகரணங்கள்

38, குட்டி தெரு, பெருமாள் பேட்டை, சென்னை-7. போன்: 664293

கவிஞர் மு. மேத்தாவின் புதிய படைப்புகள்

ஊர்வலம்


அங்கங்கே அம்புகள் • கனிமுத்துப் பதிப்பகம் - சென்னை - 6.

இதயத்தில் நாற்காலி • திருமகள் நிலையம் - சென்னை - 17.

முகத்துக்கு முகம் • பாரதி பதிப்பகம் - சென்னை - 17.


FREE E- BOOKS , www.thamizham.net.,

# அரசாங்கம் பசிக்கொடுமையை வளர்க்கிறது



இந்திய அரசாங்கம் பசிக்கொடுமையை திட்டமிட்டு வளர்க்கிறதோ என்பதற்கான பல செய்திகள் கிடைத்துள்ளன.

அவற்றில் சில:

30 கோடி மக்கள் அரசாங்க உணவு தானியக் கிடங்குகளில் மக்களுக்காக சேகரித்து வைக்கப்பட்டிருக்கும் உணவு தானியங்களை விலை கொடுத்து வாங்க முடியாமல் ஒவ்வொரு நாளும் அரைப்பட்டினி கிடக்கின்றனர்.

இவர்களை "வேலைக்கு = உணவு" என்கிற திட்டத்தில் ஈடுபடுத்தி சரியான முறையில் உணவு தானியங்களை வழங்குவதற்கு அரசிடம் எவ்வித உருப்படியான திட்டமும் இல்லை.

இந்நிலையில் அரசாங்க கையிருப்பு உணவு தானியங்களின் அளவு 160 லட்சம் டன்களிலிருந்து 300 டன்களாக உயர்ந்துள்ளது. இத் தானியங்களைப் பாதுகாத்து வைக்க அரசு ரூ. 500 கோடி செலவு செய்கிறது. பல இடங்களில் தானியங்கள் திறந்த வெளியில் கொட்டப்பட்டு மக்கி வீணாகிறது.

FREE E- BOOKS , www.thamizham.net.,




முப்பது கோடி மக்களின் பசிக்கு உதவாது அரசு, உணவு தானியங்களை 500 கோடி ரூபாய் செலவு செய்து மக்கி பாழா வதற்கு காரணமாகிறது எனில் அது திட்ட மிட்டு பசிக்கொடுமையை வளர்க்கிறது என்பது தெளிவாகிறதல்லவா?!

– வெங்கட்

FREE E- BOOKS , www.thamizham.net.,


# வாசகர் எதிரொலி

● நம் நாட்டின் பெரும்பான்மையான விவசாயிகளுக்கு உரிய மதிப்பையும் கௌரவத்தையும் நாம் அளித்து விட்டால், கெடு கெட்டிருக்கும் இந்தச் சமூகத்தை, அவர்கள் நிச்சயம் சீர்திருத்தி விடுவார்கள் என்ற அற்புதமான கருத்தை அழகாகச் சொல்லியிருக்கிறார் சுந்தர ராமசாமி அவர்கள்.

-பி.எல். பரமசிவம்
மதுரை- 1.

(இது போன்று சுந்தர ராமசாமி அவர்களின் கருத்துக்களைப் பாராட்டி வந்த கடிதங்கள் ஏராளம். இடம் பற்றாக் குறை காரணமாக சில வாசகர்கள் பெயரை மட்டும் குறிப்பிடுகிறோம்)

N. சண்முகம், திருவண்ணாமலை
மு. இளவரசு, கோவிலூர்.
எஸ். பன்னீர் செல்வம், முத்தரசநல்லூர்.




● இவ்விதழ் கையெழுத்தால் அச்சடிக்கப் பட்டிருப்பது நன்றாக உள்ளது.

பா. இறையரசன்,
தஞ்சாவூர்- 613006.

● கோட்பாடற்ற அரசியல் பிரமுகர்களின் கண் துடைப்புச் சட்டங்களால் சீரழிந்து வரும் சுகாதாரங்களின் அப்பட்டங்களை பகிரங்கப் படுத்த உம்மைப் போன்ற நடுநிலை பத்திரிகைகள் தான் நாட்டுக்குத் தேவை!

-ஜெனா தாசன்
திருச்சி- 620101

FREE E- BOOKS , www.thamizham.net.,

● வான் கோழிகளெல்லாம் ஆடிக் கொண்டிருக்கும் இக் காலத்தில் மயில் - சுட்டி ஆடாமல் நின்று விடுவதோ? சுட்டியின் உண்மைவாசகி என்ற முறையில் சுட்டியை நிறுத்தக் கூடாது, நிற்காது, நிற்க விட மாட்டோம்! என்று கேட்டுக் கொள்கிறேன்.

- குமாரி நாஞ்சில் பிரேமா
புதுடில்லி - 110001.

● 'கண்ணீர் மருத்துவம்' ரொம்ப ஓவர்! மூட்டைப் பூச்சியை அழிக்க ஒரு தேக்கரண்டி கண்ணீர் தாருங்கள் சித்தன். ப்ளீஸ்!

- இராஜ வேலுச்சாமி
கருத்தனேந்தல்

● யாருமே இது வரை பார்க்காத அண்ணாவின் மறுபக்கத்தை ஆடிமாதத் தந்துள்ளீர்கள். ஆம்! அண்ணா ஓர் ஆங்கில மோகி! ஆனால், அண்ணா தமிழுக்குத் தாயின் இடத்தை அளித்த பிறகே ஆங்கில மாதை மணந்தார். தாய்க்குப் பின் தாரம். இதில் என்ன தவறு?

- தி. சோ. இரகுராமன்,
திருவிடைமருதூர்.

● அரசியல் ஆதாயத்துக்காக "எங்கும் தமிழ், எதிலும் தமிழ்" என்று பாடும் இவர்களுக்கு ஆபத்து என்றால் தமிழைப் போட்டு உடைக்கவும், ஒதுக்கி வைக்கவும் தயங்கமாட்டார்கள் என்பது முற்றிலும் உண்மை. இதனைத் தோலுரித்துக் காட்டிய எழிலுக்குப் பாராட்டுக்கள்.

வெ. நாராயணன்
காஞ்சி.

FREE E- BOOKS , www.thamizham.net.,

சிறுகதை

# இன்ஸ்பெக்ஷன்

"பசங்களா, நல்லா கவனிச்சுக்குங்க!" டி.ஓ வந்தவுடனே ரெண்டே கேள்விதான் கேட்பேன். பதிலையும் இப்பவே சொல்லிடுவேன். மனசுல நல்லா பதிய வச்சுட்டு சரியாச் சொல்லணும்... என்ன?" என்று கேட்டுவிட்டு ஒரு பிட்டுப் பேப்பரை எடுத்துப் படிக்கத் தொடங்கினார் தலைமையாசிரியர்.

குப்பன் என்ற மாணவனுக்கு என்னவோ செய்ய ஆரம்பித்து, "சார் வவுத்த வலிக்குது; வூட்டுக்குப் போறேன்" என்று எழுந்தான்.

வாசலில் ஜீப் சத்தம் கேட்டது. பதறிப் போன ஆசிரியர், டி.ஓ.வை வரவேற்க வாசலுக்கு விரைந்தார். டி.ஓ. வந்ததும் வராததுமாக "இவ்வளவு தானா ஸ்டெங்த்?" என்றார். இப்ப அறுவடை சீசனாச்சே!... தலையைச் சொறிந்து கொண்டே நாற்காலியில் இருந்த தூசிகளைத் தட்டிவிட்டு டி.ஓ.வை அமரச் செய்தார்.

பள்ளிக் குடிசை இன்றோ, நாளையோ தலையில் விழும் அபாயத்தில் இருந்தது. சம்பிரதாயமாக ஆசிரியரே கேள்விகள் கேட்க ஆரம்பித்தார்.

"நமது தேசிய பறவை எது?"

எல்லோரும் திரு திருவென்று முழித்தனர். கையையும், காலையும் ஆட்டி மயில் தோகையாட்டம் செய்து காண்பித்துப் பார்த்தார். பலன், பூஜ்யம் தான்! பின்னர், தானே, 'மயில்' என்று சொல்லிக் கொண்டார்.

FREE E- BOOKS , www.thamizham.net.,


சுட சுட ஹார்லிக்ஸ் வந்தது. எல்லா ஃபைலிலும் குட்... குட்... என்று கையெழுத்துப் போட்டுவிட்டு ஜீப் பறந்தது.

o o o

அட, பாவிப்பய மவனே! சேறு குழைக்கச் சொன்னா இங்க வந்து குந்திக்கிட்டு என்னடா பண்றே? குப்பனின் அப்பன் சுப்பன் கூறியதும், மீதி இருந்த இரு பிள்ளைகளும் குப்பனுடன் சேர்ந்து வெளியேறினர்.

இந்த வருட இன்ஸ்பெக்ஷன் நல்லபடியாக முடிந்த திருப்தியில் பள்ளியை பூட்டிக்கொண்டு நடையைக் கட்டினார் தலைமை ஆசிரியர்.

ஸ்ரீ. இரகுராமன்.



## தலையில்லாத அட்டை

புலி முத்திரையே இல்லாத இந்த அஞ்சலட்டையைக் கவனியுங்கள்.

5 காசு குறைவாக தபால் தலை ஒட்டியிருந்தால் 10 காசு வசூலிக்கும் அஞ்சல் துறை இந்த அஞ்சலட்டையைப் பாதி விலைக்கல்லவா விற்றிருக்க வேண்டும்? ஆனால் 20 காசு வசூலித்து இருக்கிறதே! தப்பு செய்தவர் யாரோ? தண்டனை மட்டும் அனுபவிப்பது மக்களா?

- இளங்குரு


FREE E- BOOKS , www.thamizham.net.,

# வயிற்றெரிச்சல் செய்திகள்!

மெரீனா கடற்கரைக்கு அழகூட்டுவன ஆங்காங்கே கிடக்கும் கட்டுமரங்களும், வலைகளும், மீனவர் குடில்களும் அல்லவா? இதை அன்னியர்கள் வந்து சொல்ல வேண்டுமா? அழகு ரசனை இல்லாத சென்னை மாநகராட்சியின் சாதனையால், ஏழை மீனவர்களின் வயிறு எரிகின்றதே!

10 அடி தண்ணீர் நிற்கும் கோட்டூர்புரத்திலும், 5 அடி தண்ணீரில் அமிழ்ந்து கொண்டே இருக்கும் D.B. ஜெயின் கல்லூரிக்கும் எந்த மடையன் கடைக்கால் எடுத்தான்?

– ஒரு பாமரன்



புரட்சித் தலைவர் உடல் நலம் தேற வேண்டித் தீக்குளித்தவர்கள் 14 பேர்; தூக்கில் தொங்கியவர்கள் 3 - பேர்; விஷம் குடித்தவர்கள் 2 பேர்; தூக்க மாத்திரையால் இருவர்; அதிர்ச்சியால் ஒருவர். இப்படி 22 பேர். அவர்கள் குடும்பத்துக்கு தலா ரூ. 20,000 நன்கொடை வழங்கப்படுகிறது. இவ்வாறு உயிர் விடுவதை விட, உயிர்வாழ்ந்து நாட்டுக்கும், பிறருக்கும் தம் வாழ்க்கையை அர்ப்பணித்துக் கொள்வது சிறந்தது என்ற சரியான உண்மை வலியுறுத்தப் பட வேண்டும்.

அதற்கு ஒரே வழி இந்த மாதிரி தொகைகள் தந்து விளம்பரப் படுத்திக் கொள்ளாமல் இருப்பதுதான்!

- சுபா

FREE E- BOOKS , www.thamizham.net.,

ஆவின் நிறுவனம், சிந்தாமணி கூட்டுறவுச் சிறப்பங்காடி போன்ற தமிழகத்து நிறுவனங்கள் பிடிவாதமாக ஆங்கிலத்தைப் பொது மக்களிடையே திணித்து வருகின்றன.

# ஆங்கிலத் திணிப்பு!

—சுட்டி பாரதி

தீபாவளியன்று பால் பாக்கெட்களில் ஆங்கிலத்தில் வாழ்த்து அச்சிட்டு விநியோகம் செய்தது. பக்கத்தில் இருக்கும் ஆந்திர, கர்நாடக மாநிலங்களில் பால்வள நிறுவனங்கள் தத்தம் மொழிகளில் வாழ்த்துக் கூறியிருப்பது இவர்களுக்கு எங்கே தெரியப் போகிறது?

யாருக்காக இவர்கள் ஆங்கிலத்தில் அச்சிடுகிறார்கள்? மாநில எல்லைக்குள் முடியக் கூடிய அனைத்துத் துறைகளின் செய்திகள், படிவங்கள், எல்லாம் தமிழில் அல்லவா இருக்க வேண்டும்! இது தானே ஆட்சி மொழிச் சட்டம்!

தமிழ் நாட்டின் அரசியல் மேடைப் பேச்சார்களும், 'தமிழ் எங்கள் உயிர்' என்று மார்தட்டும் மாவீரர்களும் எங்கே போய் விட்டார்கள்? கி. ஆ. பெ. விசுவநாதம், ம.பொ.சி., சஞ்சீவி, நன்னன் போன்றோர் வாய் மூடி மௌனியாக இருப்பது ஏன்?

FREE E- BOOKS , www.thamizham.net.,

**வறட்சியும் வெள்ளமும் தீர்க்கப் படக்கூடிய பிரச்சனைகளே!**

வறட்சியும், வெள்ளமும் தீர்க்கப் பட முடியாத பிரச்சனைகள் அல்ல!

வட இந்திய நதிகளையும், தென் இந்திய நதிகளையும் இணைப்பதின் மூலம் வெள்ளச் சேதத்தையும், செழிப்பான விளை நிலங்களாக மாற்ற. வறட்சியையும் தடுக்க முடியும்.

நதிகளை இணைக்கின்ற இந்தப் பணியின் பரிமாணம், பிரமாண்ட மானாலும் அதைச் செய்வது என்றும் அவ்வளவு கடினமல்ல.

பொதுப் பணித் துறையைச் சேர்ந்த ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் பணியாற்றிடும் பொறியாளர்களை திட்டம் வகுத்துக் கொடுக்குமாறு பணித்து, ஒவ்வொரு உள் பஞ்சாயத்தும் அடுத்த ஊர் எல்லை வரை கால்வாய் வெட்டிக் கொடுக்க வேண்டியது என்று முடிவு செய்தால் இந்துமாக் கடலையே இமய மலைக்குக் கொண்டு செல்லும் சக்தி நம்மிடம் உள்ளதை அறிய முடியும்.

இத் திட்டத்தால் 'உணவுப் பொருட்கள்

FREE E- BOOKS , www.thamizham.net.,

வழங்கும் திட்டம் சிறப்பாக இயங்கவும், வேலையின்றி இருக்கும் கோடிக்கணக்-கான விவசாயத் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்புகள் பரவலாகக் கிடைக்கவும் வழி ஏற்படும்.

உண்டு கொழுத்து உறங்கும் இரா-ணுவத்தையும் இத்திட்டத்தில் இறக்கினால் வெகு விரைவாகவும், வெகு எளிதாகவும் முடிக்கலாம். இப்படி நதிகளை இணைப்பதின் மூலம், வடிகால் வசதிகளைத் திட்டமிட்டு திறம்பட பயன் படுத்துவதின் மூலமும் இந்திய மக்களை வறட்சி, வெள்ளம் முதலியவற்றின் கோரப்பிடியிலிருந்து மீட்டெடுக்-கவும் முடியும்.

வரலாற்றுச்சான்று:

ஆண்டு தோறும் சுமார் 2½ இலட்சம் மக்களை பலி கொண்ட சீனாவின் மஞ்சள் ஆறு இலட்சக்கணக்கான மக்களின் உழைப்பால் பாதை மாற்றி அமைக்கப்பட்டதால் பல இலட்சக் கணக்கான ஏக்கர் நிலங்களுக்கு பாசன வசதி கிடைத்ததுடன் உயிர்ச் சேதமும் அறவே குறைந்து விட்டது.




தகவல்: மோகன்.

FREE E- BOOKS , www.thamizham.net.,

புத்தகப் பிழிவு




வெளியீடு:
முன்னேற்றப் பதிப்பகம்
சென்னை-17.

208 பக்கங்கள் விலை ரூ. 15/-

ஆசிரியர்: சிவலை இளமதி

# வரலாறு படைத்த வழக்குகள்

இந்திய விடுதலைப் போரில் புரட்சி இயக்கங்களின் பங்கை விவரிக்கும் நூல்களில் ஒன்று.

எவ்வித பலனையும் எதிர் பாராது நாட்டுப் பற்றுடன் அந்நியர் ஆதிக்கத்தினின்று இந்நாட்டுக்கு விடுதலை வேண்டும் என்கிற குறிக்கோள்களுக்காக ஆண், பெண், ஏழை, பணக்காரர் படித்தவர், படிக்காதவர் அனைவரும் இணைந்து போராடிய வரலாறு. பெண்கள் கற்பையும், குழந்தைகளையும் இழந்த சூழ்நிலையிலும் புரட்சி வீரர்களைக் காட்டிக் கொடுக்காது உறுதியுடன் நின்ற வீரம், தீரம் ஆகியவை படிப்பவரை மெய் சிலிர்க்க வைக்கிறது.

வெள்ளையனின் போலித்தனமான நீதி விசாரணைகளை தூக்கு மேடைக்குச் செல்லப் போகிற நிலைமையிலும் நீதிபதியின் எதிரிலேயே கேலி செய்த புரட்சிக்

FREE E- BOOKS , www.thamizham.net.,

காரர்களின் நகைச் சுவையுணர்வு நம்மையும் நகைக்க வைக்கிறது; திகைக்கவும் வைக்கிறது.

குலசேகரப் பட்டணம் சதி வழக்கில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட காசிராஜனும், இராஜ கோபாலனும் 74 ஆண்டு கால கடுங்காவல் தண்டனையையும், சேர்த்து வழங்கிய நீதிபதியைப்பார்த்து-சிரித்தவாறே,





"ஐயா, நீதிபதி அவர்களே! எங்களுக்கு இருப்பதோ ஒரே ஜென்மம்தான். தாங்களோ அதைப்பறிக்க தூக்குத் தண்டனை விதித்திருக்கிறீர்கள். மிக்க நன்றி! அதற்குமேல் மூன்று ஜென்மத் தண்டனைகளையும் சேர்த்து விதித்திருக்கிறீர்கள். அதை நாங்கள் எப்பொழுது அனுபவிக்க வேண்டும்? தூக்குத்தண்டனை நிறைவேற்றிய பின்னரா? அதற்கு முன்பா?" என்று கேட்டு நீதி மன்றத்தையே சிரிப்பலைகளால் அதிர வைத்தனர்.

வீரமும், தியாகமும், விடுதலை உணர்ச்சியும் பொங்கி எழும் அற்புதத் தொகுப்பு இது. 'வெங்கட் - மோகன்'

FREE E- BOOKS , www.thamizham.net.,


# ஐரோப்பாவை இணைக்கும் பாலம்





ஐரோப்பாவை கடலின் மூலம் இணைக்கும் திட்டம் ஒன்றை பிரிட்டன், பிரெஞ்சு அரசாங்கங்கள் பரிசீலித்து வருகின்றன.

நடுக்கடலில் செயற்கை தீவு ஒன்றை உருவாக்கி சுரங்கப்பாதையின் வழி அதனை இணைப்பது என்ற ஒரு திட்டம் பற்றி வரைபட நிபுணர் ஒருவர் தயாரித்த கற்பனை உருவகம் இது.




FREE E- BOOKS , www.thamizham.net.,

# மந்திரிகளே! மந்திரிகளே!

கிழக்கு ஆப்பிரிக்காவில் டான்சானியா என்னும் நாட்டில் 25 வருடமாக அதிபராக இருந்த திரு. ஜூலியஸ் நியரெரே, சமீபத்தில் தனக்குப் பதிலாக இன்னொருவரை தேர்ந்தெடுத்து விட்டு, தானாகவே பதவியிலிருந்து ஓய்வு பெற்று விட்டாரார்.

63 வயது நிரம்பிய இந்தக் கருப்பு நாட்டுத் தலைவருக்கு தனக்கென நிலம், கார், பங்களா, தொழிற்கூடம் என்று எதுவுமே கிடையாதாம். இவரது 25 வருட தேச சேவையைப் பாராட்டி, அந் நாட்டு நிலச் சுவான்தார் சுமார் 1¼ லட்ச ரூபாய் மதிப்புள்ள பொருட்களை வழங்க முன் வந்த போது, வாங்க மறுத்து விட்டாராம். அவர் சொன்னது: "*இவ்வளவு பொருட்களை வைத்துக் கொள்ள என்னிடம் இடமில்லையே!*"

15 ஆண்டுகளாக இவருடைய அரசாங்க சம்பளத்தில் 'ஊதிய உயர்வே கிடையாதாம்!' தன் சக அமைச்சர்களை விட தனது சம்பளத்தை குறைவாகவே பெற்று வருகிறாராம்.



இவருக்கென்று இருக்கும் ஒரே சொத்து, இவரது சொந்தக் கிராமம் புட்டியாமா′ என்ற இடத்தில் இருக்கும் இவரது பழைய வீடு மட்டும்தான்.

தகவல்:
— ஜெய முனியன்

FREE E- BOOKS , www.thamizham.net.,

வேதநாயகரும் பெண்மையும் (16-00) டாக்டர். சரளா ராசகோபாலன், ஒளி பதிப்பகம், 63, ரங்காச்சாரி சாலை, சென்னை - 600 018

இன்றைய தென்னக இலக்கியப் போக்கு (12-00) மணவை முஸ்தபா, மீரா ஃபௌண்டேஷன், ஏ. ஈ., 103, அண்ணாநகர், சென்னை - 600 040.

திராவிட சமயமே நமது சமயம் (0·50) டாக்டர். மு. தெய்வ நாயகம், திராவிட சமய ஆய்வு இயக்கம், 278, கொன் ஹார்நெடுஞ் சாலை, அயனிபுரம், சென்னை - 600 023.

வேழ வேந்தன் கவிதைகள் (5·50) கா. வேழவேந்தன்
சிந்தனைக் கோவை கட்டுரைகள் (4·50) சகதி. சீனி வாசன். மேற்கண்ட இரண்டும் வெளியீடு: அல்லயன்ஸ் கம்பெனி, த. பெ. 617, மயிலாப்பூர், சென்னை - 600 004.


வசந்தம் வருகிறது கவிதைத் தொகுப்பு (8 00) ஏர்வாழ எஸ். இராதாகிருஷ்ணன், சுதா பதிப்பகம், 4, மூத்து தெரு, புரசைவாக்கம், சென்னை - 600 007.

இருட்டில் ஒரு வெளிச்சம் (நாடகம்) விலை ரூ 7-50. பட்டுக் கோட்டை குமாரவேல் - பூங்கொடி பதிப்பகம், 14 - சித்திரைக் குளம் மேற்கு வீதி, மயிலாப்பூர், சென்னை - 600 004.

குடும்ப நலம் (கட்டுரைகள்) விலை ரூ 8-00. பிரமானந்தம் அநுராகம், 10, ஹென்ஸ்மென் ரோடு, தி. நகர், சென்னை - 17.


தம்பி அவனைப் பார். மாணவர் நாடகம். விலை ரூ 6/- மு. சிவம் கவிதா பானு - 122, பெரியார் பாதை, சென்னை - 600 094.

கூட்டுக் குயில் பாட்டுக் குரல்
மரபுக் கவிதைகள். விலை ரூ 3-50
ய. மணிகண்டன், தமிழ்க் குரல்
வெளியீடு, தெற்கு வீதி, கோவிலூர்,
முத்துப் பேட்டை, - 614 704
தஞ்சை மாவட்டம்.




FREE E- BOOKS , www.thamizham.net.,

# உயர்நிலைப் பள்ளியின் தாழ்ந்த நிலை!



ஜோலார் பேட்டை (வ.ஆ.)

அருகிலுள்ள பொன்னேரி கிராமத்தில் உள்ள உயர்நிலைப் பள்ளியில் விளையாட்டுக்கென்று இடமே கிடையாது. சொல்லப் போனால் விளையாட்டைப் பற்றியே தெரியாது - மாணவர்களுக்கு. விளையாட்டுப் பொருள்களும் கண்ணில் காணாத ஒன்று.

ஆண்டு தோறும் விளையாட்டுப் பொருள்களுக்கென சிறப்புக் கட்டணமாக ஒரு பகுதி வசூலிக்கிறார்கள். (கிராமப்புற மாணவர்களின் வளர்ச்சியில் அக்கறை காட்டுவதாக அரசு கூறுகிறது.) நகர்புற மாணவர்களைப் போல் கிராமப்புற மாணவர்கள் விளையாட்டில் திறமை குன்றிப் போவதற்கு இதுவும் ஒரு காரணம். "பள்ளியில் நூலகம் உள்ளதா?" என்று கேட்டால், "அப்படி என்றால் என்ன?" என்று கேட்கும் அளவுக்கு நூலகமின்றி பள்ளி நடத்தப்படுகிறது.

மாணவர்களின் பொது அறிவு மழுங்கிப் போகுமே! சம்மந்தப்பட்டவர்கள் இக்குறையை நிவர்த்தி செய்தால் மாணவர் பயன் பெறுவர். - மறுமலர்ச்சிப் பித்தன்

FREE E- BOOKS , www.thamizham.net.,



# அண்ணா என்கிற மனிதர் 9

இந்தியாவின் அரசியல் விடுதலைப் போராட்டத்திற்குத் தலைமை ஏற்று, நாடு சுதந்திரம் பெறக் காரணமான மகாத்மா காந்தியடிகள் செத்த போது, அதிர்ச்சியால் ஒருவர் இறந்தார். பாரதத்தின் முதல் பிரதமரும், ஆசிய ஜோதியுமான நேரு பிரிந்தபோது இறந்தவர் இருவர்.

அண்ணா மறைந்தபோது 42 பேர் மரணத்தைத் தழுவினார்கள். அண்ணாவின் மரண ஊர்வலத்தில் 30 லட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் சென்னையில் கூடினார்கள். உலக வரலாற்றில், இது வரை வேறு யாருக்கும் இவ்வளவு பேர் வரவில்லை என்று 'கின்னஸ்' புத்தகம் கூறுகிறது.

தமிழகத்து மக்களிடம் வரலாறு காணாத அபிமான மனிதராக அண்ணா விளங்கினதற்குக் காரணம் என்ன?

தமிழகத்தில் இதுவரை உதித்த ஞானிகளும், மகான்களும் பெறாத செல்வாக்கு வாழ்நாளில் அண்ணாதுரைக்கு ஏற்பட்டிருப்பது மறுக்க முடியாத உண்மை.

வள்ளலார் ராமலிங்க அடிகளாரின் சமரச சன்மார்க்க சங்கம் ஜாதி ஒழிப்பு போன்ற புரட்சிகரமான கருத்துக்களைச் சொன்ன போது மக்கள் ஆதரிக்கவில்லை. "கடை விரித்தோம் கொள்வாரில்லை" என்று தன் வாழ்நாளிலேயே நொந்து போனவர் வள்ளலார்.

"பார்ப்பானை ஐயர் என்ற காலமும் போச்சே" என்று அண்ணாவுக்குப் பல ஆண்டுகள் முன்பே ஆரியமாயைக்குச் சாவு மணி அடிக்க பாரதி முயன்றபோது செல்வாக்குப் பெறவில்லை. பாரதி

FREE E- BOOKS , www.thamizham.net.,

மரண ஊர்வலத்தில் விரல்விட்டு எண்ணக்கூடிய சிலரே கலந்து கொண்டனர்.

சமூக மாறுதலை நோக்கி தவிர்க்க முடியாதபடி காலம் கனியும் போது அண்ணா என்கிற மனிதரின் பிரச்சாரமும், கொள்கைகளும் உருபடுகின்றன.

காலம் தனக்கிட்ட கட்டளையைத் தனக்குச் சாதகமாக்கி மக்கள் தலைவராகி [illegible] இது மட்டும் காரணமல்ல.

காலங்காலமாக இந்த மண்ணின் மைந்தர்களிடையே ஊறிப் போய் உள்ள குணாதிசயங்களுக்கு ஏற்ற மனிதராக அண்ணா விளங்கினார் என்பதே அண்ணாவின் பூதாகரப் புகழுக்குக் காரணம்.

மந்தமான இந்த நாட்டு மக்களின் மனோபாவத்திற்குக் கிடைத்த அருமையான பிரதிநிதி அண்ணா! கொதித்தெழும் குணமற்ற பாமர மக்கள் கூட்டத்திற்குப் பிடித்தமான கோபமே [illegible]யான மனிதர் அண்ணா!

வாழ்வின் மையப் பிரச்சனைகளை விட பொழுதுபோக்கு அம்சங்களில் மூழ்கித் திளைத்து வாழ்வைத் தொலைத்துக் கொண்டிருக்கும் நம் தமிழர்கள் மத்தியில் இசையிலும், கூத்திலும், கவிதையிலும், திரைப்படத்திலும் மிகவும் ஆர்வம் காட்டிய அண்ணாவின் கலா ரசனை மேலும் மக்களை மகிழ்வூட்டியது. கேலிச்சித்திரம் உட்பட அண்ணா அறியாத போற்றாத கலை ஏது?

பேசிப்பேசியே உணர்ச்சி[illegible]ணைகளில் காலத்தை ஊதாரித்தனமாக விரயமாக்கிய பேச்சு ரசிகர் மத்தியில், மாபெரும் பேச்சாளரான அண்ணா மக்கள் மனதில் பள்ளத்து வெள்ளம் போல் இடம் பிடித்தார்.

FREE E- BOOKS , www.thamizham.net.,

இயேசு நாதருக்கு முன்பேயே அகிம்சையின் ஆற்றலை உணர்ந்து அதனைப் பெருமைப்படுத்தியவர்கள் தமிழர்கள். இந்த அஹிம்சையென்ற தாக்குதல் முறையைப் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்தி எதிரிகளை வீழ்த்திய அண்ணாவின் போர்முறை மக்களின் சுபாவத்திற்கு உகந்தது. வரவேற்பும் பெற்றது. அவரைப் பிரபலப்படுத்திய அகிம்சை முறை தாக்குதல் நிகழ்வுகள்:-

தி.க.வை விட்டு அண்ணா பிரிந்தபோது பெரியார் வீசிய பல கண்டனக் கணைகளை ஏற்றார். "எனக்குத் தாங்கிக் கொள்ளும் பலம் உண்டா என்று பெரியார் பரிசோதிக்கிறார்" என்று சொன்னாரே தவிர, பெரியாரை நோக்கி ஒரு சுடு சொல்லும் கூறாது எச்சரிக்கையாய் இருந்தார்.

தி.மு.க.வினரை நேரு, "நான்சென்ஸ்" என்று திட்டிய போது "பண்டித நேரு மிக மிகப் பெரிய மனிதர். நாமோ மிக மிகச் சாமான்யர்கள். பெரியவர் தவறு செய்துவிட்டார் சாமான்யர்களான நாமும் அந்தத்தவறைச் செய்ய வேண்டாம். மறப்போம்; மன்னிப்போம்" என்றார்.

தன்னைத் தாக்குபவர்களின் பலத்தை அவர்கள் மீதே திருப்பி விடும் இந்த மென்மையான போர் முறைக்கு அவர் வாழ்வில் பல உதாரணங்கள் உண்டு. "தென்னாட்டு காந்தி" என்று அவர் அழைக்கப் பட்டதும் இதற்காகத்தான்.

பொது மக்களின் மொத்த உணர்வுகளுக்கு எதிராக அண்ணா முழங்கவே மாட்டார். 98% மக்களுக்கு சாதகமாகவும் 2% மக்களுக்கு பாதகமுமானதும் தானே பார்ப்பனீய எதிர்ப்பு! கடவுள் நம்பிக்கை மிகுந்த தமிழர்கள் மத்தியில் பெரியாரின் சீடரென்று சொல்லிக் கொண்டாலும் அவர் மிக எச்சரிக்கையாக நடந்து கொண்டார்.

FREE E- BOOKS , www.thamizham.net.,

பெரியார் பிள்ளையார் உடைப்புப் போராட்டம் நடத்தியபோது "உங்கள் நிலை என்ன" என்று நிருபர்கள் கேட்டபோது, "நாங்கள் பிள்ளையாரையும் உடைக்க மாட்டோம். பிள்ளையாருக்குத் தேங்காயும் உடைக்க மாட்டோம்" என்று ஆத்திகர்களுக்கும் நாத்திகர்களுக்கும் தான் வேண்டியவன் என்ற சமரச போக்கை மேற்கொண்டார். "ஏழையின் சிரிப்பில் இறைவன்" என்றது கூட தந்திரமான நழுவலே!

அதே மாதிரி உயிர்க் கொள்கைகளாயினும் அவற்றையும் காலத்திற்குத் தக்கதுபோல மாற்றிக் கொள்ளவும் - நான் கூறியதும் இருப்பதற்கும் ஆதாரத்தைத் தாங்கிக் கொள்ளவும் மனம் வேண்டும் என்பதால் தானோ 'எதையும் தாங்கும் இதயம் வேண்டும்" என்று குறிப்பிட்டாரோ!

பெரியாரின் கொள்கைப் பிடிவாதமும், காந்தியின் பச்சையான நேர்மையும் அண்ணாவிடம் இல்லை என்பதாலேயே அண்ணா அவர்களைவிட பக்குவத்திற்கு உகந்தவராக, பிடிப்பானவராக விளங்கினார். (அடுத்த இதழில் முடியும்) — எழில்


**தமிழகமங்கலம் வீடுகள், வீட்டு மனைகள் வாங்க-விற்க தொடர்பு கொள்க: எம். வெங்கட், 24, திருவள்ளுவர் தெரு, இராமாபுரம், அம்பத்தூர் சென்னை - 600 053.**

– வரிவிளம்பரம்

**கவிதா நூலகத்திற்கு இலவசமாக பழைய-புதிய நூல்களை அனுப்பலாம். கவிதா நூலகம், 139, சத்திய மூர்த்தி ரோடு, ஆரணி, (NA) - 632 301.**

– வரி விளம்பரம்


FREE E- BOOKS , www.thamizham.net.,

# நமது பட்டினி மருத்துவம்

* மனித உடலுக்கு தானே நோயைக் குணப்படுத்திக் கொள்ளும் ஆற்றல் உண்டு. அந்த ஆற்றலை மிகுதிப் படுத்திக் கொள்ள உதவுவது 'பட்டினி மருத்துவம்'.

* சராசரி உடல் நிலையுள்ளவர்கள் வாரம் ஒரு முறை, முதல் அல்லது கடைசி ஒரு வேளை மட்டுமே உணவும், மற்ற இரு வேளை, பட்டினியும் கிடப்பதே சரியான முறை. சற்று நல்ல உடல் நிலையுள்ளவர்கள் வாரம் ஒரு நாள் முழுவதும் பட்டினி கிடப்பது நல்லது. இயலாதவர்கள் வாரம் ஒருமுறை ஒரு வேளையாயினும் பட்டினி கிடக்கலாம். பட்டினி இருக்கும் போது நீர் மட்டும் தவறாது பருக வேண்டும். பட்டினி முறிக்கும் போது அடர்த்தியான திட உணவு கூடாது. ஆரஞ்சு அல்லது எலுமிச்சை சாறு நல்லது. பின்னர், திட உணவு கூடும்.

* வாரத்தின் 6 நாட்கள் நாம் உண்ணும் உணவுகள், நச்சுப் பொருட்கள் 7 வது நாள் பட்டினியின் போது சிறுநீரகம், குடல், நுரையீரல், தோல் வழியே வெளியேறுகின்றன.

* 3 முதல் 90 நாட்கள் நோயாளிகளைப் பட்டினி இருக்க வைத்து, புற்று நோய், காச நோய் இவற்றையும். ஆயிரக்கணக்கில் குணப்படுத்தியுள்ளார் அமெரிக்க மருத்துவர் ஷெல்டன் (DR. SHELTON, P.B. No 1277, SAN ANTONIO, TEXAS - 78206, U.S.A.)

FREE E- BOOKS , www.thamizham.net.,

* மன நோயாளிகளுக்கு, போதை பொருட்களில் அடிமையானவர்களுக்கு விரைவான குணமளிப்பது பட்டினி மருத்துவம்.

* அல்சர் உடையோர், மகப்பேறுடைய மகளிர், ஆகியோர்க்கு பட்டினி மருத்துவம் செயலாகாது. பிற நோயாளிகள் மருத்துவரின் ஆலோசனைப் படி பட்டினி காலத்தை நிர்ணயிக்க வேண்டும்.

"உபவாசம் கொள்வதை விட வேறு சிறந்த தவம் இல்லை"

(அடுத்து: நமது சூரிய மருத்துவம்.) - சித்தன்)

# பாரதி சொல்வது உண்மைதானோ?



கண்ணுக்குத் தெரியாத நுட்பமான பூச்சிகள் தண்ணீர் மூலமாகவும், காற்று மூலமாகவும், மண் மூலமாகவும் பரவி, நோய்களைப் பரப்புகின்றன என்ற விஷயம் ஐரோப்பிய 'ஸயன்ஸ்' மூலமாகக் கண்டு பிடிக்கப்பட்டிருப்பதில் ஒரு சிறிது உண்மை இருப்பது மெய்யேயாயினும், மனம் சந்தோஷமாகவும், ரத்தம் சுத்தமாகவும் இருப்பவனை அந்தப் பூச்சிகள் ஒன்றும் செய்ய மாட்டா என்பதை ஐரோப்பியப் பாட சாலைகளில் அழுத்திச் சொல்லவில்லை. அதனால் மேற்படி சாஸ்திரத்தை நம்புவோர் வாழ்நாள் முழுதும் ஸந்தோஷமாய்

FREE E- BOOKS , www.thamizham.net.,

இராமல் தீராத நரக வாழ்க்கை வாழ்கிறார்கள்.
நமது தேசியப் பாடசாலைகளில் மேற்படி பூச்சி
களைப் பற்றிய பயம் சிறிதேனும் இல்லாமல்
செய்து விட வேண்டும்.

உலகமே காற்றாலும், மண்ணாலும்,
நீராலும் சமைந்திருக்கின்றன. இந்த மூன்று
பூதங்களை விட்டு யாராலும் விலகி வாழமுடியாது
இந்த மூன்றின் வழியாகவும் எந்த நேரமும்
ஒருவனுக்கு பயங்கரமான நோய்கள் வந்து
விடக் கூடும் என்ற மஹா நாஸ்திகக் கொள்கை-
-யை நவீன ஐரோப்ப சாஸ்திரிகள் தாம் நம்பி
ஓயாமல் பயந்து பயந்து மடிவது போதாதென்று
அந்த மூடக் கொள்கையை நமது தேசத்திலும்
இளஞ் சிறுவர் மனதில் அழுத்தமாகப் பதியும்படி
செய்து விட்டார்கள். சிறு பிராயத்தில் ஏற்படும்
அபிப்பிராயங்கள் மிகவும் வலிமை உடையன.
எனவே, நமது நாட்டிலும் இங்கிலீஷ் பள்ளிக்
கூடங்களில் படித்த பிள்ளைகள் சாகுமட்டும்
இந்தப் பெரும் பயத்துக்கு ஆளாகி தீராத
கவலை கொண்டு மடிகிறார்கள்.

பூச்சிகளால் மனிதர் சாவதில்லை. நோய்
களாலும் சாவதில்லை. கவலையாலும், பயத்தாலும்
சாகிறார்கள் என்ற உண்மையை பள்ளிக் கூடத்
துப் பிள்ளைகளின் மனதில் நன்றாக அழுந்தும்படி
செய்ய வேண்டும். - பாரதியார்

FREE E- BOOKS , www.thamizham.net.,

# கொழுத்துப் போன கொழும்பு நகரம்

தமிழர் இனப்படுகொலையைப் புரிந்து வரும் இலங்கையர் இழிவாழ்வு கேட்பதற்கே அருவெறுப்பானது. அதன் தலைநகர் கொழும்பு ஏற்கனவே போதைப் பொருள் கடத்தலுக்குப் பெயர் போனது. இன்று வட இந்தியாவில் பல பகுதி போதைப் பொருள் உற்பத்தியில் முனைந்துள்ளது- வருந்துதற்குரியது. மேற்கே ஆப்கானித்தானத்தில் போர் நிலை காரணமாக, போதைப் பொருள்கள் அந்த வழியாகப் போகாமல் சமீபகாலமாக கொழும்புவழியாக போகத்தொடங்கியுள்ளன. இன்று LSD, ஹெரோயின், சரஸ், கொக்கேன் போன்ற போதைப் பொருள் கடத்தலும் விபச்சாரமுமே கொழும்பின் முக்கியத் தொழில்கள்.

அத்துடன் நில்லாமல் ஆண் விபச்சாரத்தொழிலில் இறங்கியுள்ளது அந்நகரம். ஆண் விபச்சாரத்திற்கு (HOMO--SEXUAL CONTACTS) பள்ளி மாணவர்கள், சிறுவர்கள் ஈடுபடுத்தப்படுகிறார்கள். அவர்களுடைய வீட்டு முகவரி, தொலைபேசி எண்கள் கூட சீரழிந்த மேலைநாட்டுப் பத்திரிகைகளில் (மேற்கு ஜெர்மனியின் ஸ்பார்டகஸ் போன்றவை) கவர்ச்சிகரமாக விளம்பரப்படுத்தப்படுகின்றன.

பெண் பரத்தரும், ஆண்பரத்தரும், சூதாடிகளும், போதைப் பொருள்கள் கடத்துபவரும் நிரம்பிவழியும் கொழும்புக்கு "ஸோதோம்" நகரைத்தான் உவமை கூற முடியும்.

- சுட்டி பாரதி

FREE E- BOOKS , www.thamizham.net.,

# தமிழில் தந்தி முறை

சென்னையைச் சேர்ந்த அருணாசலம் (தென்னக இரயில்வேயில் காப்பாளர் (GUARD) பொறுப்பில் இருந்து ஓய்வு பெற்றவர். இவர் திருநெல்வேலி மாவட்டத்தைச் சார்ந்தவர். தமிழில் தந்தியடிக்கும் முறையைக் கண்டு பிடித்து அதில் வெற்றிகண்டிருக்கிறார்.

தமிழ் எழுத்துக்கள் 247. எண்கள் 10 ஆச்சரியக் குறி, வினாக்குறி, முழுப்புள்ளி போன்ற குறிகட்டும் தந்தி முறையைக் கண்டு பிடித்துள்ளார். அண்மையில் நவம்பர் முதல் தேதியன்று உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் தமிழில் தந்தி அனுப்பும் முறையை மூன்று வழிகளில் நடத்திக் காண்பித்தார். ஆங்கில முறை தந்திபோல, கட கட, கட் கட், கடகட் என்ற முறையிலேயே தமிழ் எழுத்துக்களையும் அமைத்துள்ளார். பூஜ்யம் வோல்ட் பல்பு நின்று எரியும் முறையிலும், 'எலக்டிரோ கார்டியோ கிராம்' வரைபடம் மூலமும், சுட்டு விரல், பெருவிரல் அசைவினாலும் தமிழ் தந்தி முறையை நடத்திக் காண்பித்தார். இம் 'முறை' இவர் பேரனுக்கும் தெரியும். இத் தமிழ் தந்தி முறைக்கு நூல் எழுதவும் தன்னால் முடியும் என்று கூறும் இவர், 'யார் வாங்குவோர்?"

FREE E- BOOKS , www.thamizham.net.,



# இந்தியாவில் எத்தியோப்பியா

ஒரிஸ்ஸாவின் காலகண்டி, கோரபுட் மாவட்டங்களில் கடுமையான வறட்சி நிலவுகிறது. உண்பதற்கு உணவில்லை. குடிப்பதற்கு குடிநீர் இல்லை. இந்த நிலை கடந்த நான்கு ஆண்டுகளாக நிலவி வருகிறது.

ஆண்டுக்கு 600 லிருந்து 1000 பேர்கள் வரை பட்டினிச் சாவுகள் ஏற்படுவதாய் புள்ளி விபரங்கள் தெரிவித்தாலும் உண்மையில் இந்த எண்ணிக்கை பல ஆயிரங்களாக இருக்கக் கூடும்.


பல கிராமங்களுக்கு ஊற வைத்த புளியங்கொட்டையும், வேக வைத்த செத்த மிருகங்களுமே உணவாகிவிட்டன. இவையும் கிடைக்காத போது, மண்ணைத் தோண்டி வேர்களைப் பிடுங்கி, ஊற வைத்து உண்ணுகின்றனர். இதன் விளைவால் வயிற்றுப் போக்கும், வாந்தியும், சாவும் எனத் தொடருகின்றன. இந்நிலையை மாற்றியமைக்க வேண்டிய அதிகார வர்க்கச் சக்திகள் உண்மைச் செய்திகளை 'பொய், புரட்டு,' எனத் திரித்துக் கூறித் திரிகின்றனர்! நன்றி: புதிய ஜனநாயகம்

---

என்று மலைக்கிறார்! எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்று கூறும் அரசு இதனைக் கவனித்து அவரது முயற்சிக்கு ஆதரவு அளிக்குமாயின் தமிழிலும் தந்தி வரும்.

தகவல்: துரை. நீலகண்டன்

FREE E- BOOKS , www.thamizham.net.,




ஆசிரியர்: கி.நாராயணபாரதி, வெளியிடுபவர்: கி.ராமச்சந்திரன், 1494, அண்ணா நகர், சென்னை-600040. அச்சிடுவோர்: எஸ்.எம். ரவீந்திரன், ரவீந்திரன் பிரஸ், 17, Dr. நடேசன் ரோடு, திருவல்லிக்கேணி, சென்னை-600005.

FREE E- BOOKS , www.thamizham.net.,

# கதிரவன்


மாத இதழ்,
கதிரவன் அச்சகம்,
15, சரோஜினி வீதி,
மகாலிங்கபுரம்;
பொள்ளாச்சி [illegible] 002.

FREE E- BOOKS , www.thamizham.net.,

மடல்: ஒன்று இதழ் 1, ஜூன் 1985 Regd. No. TN/MS(N)/317

Licensed to post without prepayment Licence No. TN/MS(N)WPP-56

http://www.thamizham.net FREE BOOKS (TAMIL)



# Sakthi Sugars Limited

## A PACE SETTER for RURAL PROSPERITY

SAKTHI SUGARS has engineered a breakthrough in sugarcane production with innovative technology and the farmers have achieved a successive increase in yield of sugarcane to 45 tonnes from 28 tonnes to earn an additional income of Rs. 3,000/-Per acre.

SAKTHI SUGARS has enriched the springs of rural life by distributing over Rs. 20 crores as sugarcane price annually to over ten thousand farmers (a bulk of Whom are small and marginal farmers) and generating gainful rural employment to over fifty thousand families in the primary, secondary and tertiaray sectors.

SAKTHI SUGARS has promoted a number of rural development programmes (I) Sakthi High School Provides a conducive environment for study and development of rural children. (II) Sakthi Institute of Technology promotes the technical skill of the youth, and (III) V. M. Kailasam Hospital provides medical care for the region.

| | |
|---|---|
| **Head Office:** | **Reg. Office & Factory:** |
| 73-A, Race Course Road, | Sakthinagar-638 315. |
| Coimbatore-641 018. | Periyar District |

FREE E- BOOKS , www.thamizham.net.,